**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2020இன் 10ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

---

**சிறப்பு வைப்புக் கணக்குகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்படும் பணிப்புரைகள்**

2020 நவெம்பர் 17ஆம் திகதியிடப்பட்ட 2202/7ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் (*அதிவிசேட*) வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளுக்கமைய, 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரைகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன. மேலும், இப்பணிப்புரைகளின் 3ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட ஏனைய நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**2 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

**2.1** 3(அ) மற்றும் 7(ஆ) பந்திகளில் காணப்படுகின்ற ‘‘ஆறு மாதங்கள்’’ என்ற சொற்கள் இத்தால் நீக்கப்பட்டு ‘‘பன்னிரெண்டு மாதங்கள்’’ என்ற சொற்களினால் பதிலீடு செய்யப்படுகின்றது.

**3 ஏனைய நிபந்தனைகள்**

**3.1** அத்தகைய உள்முக பணவனுப்பல்கள் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறக்கும் நோக்கத்திற்காக பிரத்தியேகமாக கிடைக்கப்பெற்றிருக்கின்றன எனும் நிபந்தனைக்கிணங்க, 2020 ஏப்பிறல் 08ஆம் திகதிய 2170/4ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் சிறப்பு வைப்புக் கணக்குகள் திறக்கும் நோக்கத்திற்காக 2020 ஒத்தோபர் 07ஆம் திகதி தொடக்கம் 2020 ஒத்தோபர் 12ஆம் திகதி வரையான காலப்பகுதியில் உள்முக பணவனுப்பல்களாக கிடைக்கப்பெற்று அத்தகைய தகைமையுடைய ஆளின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினுள் வரவுவைக்கப்பட்டுள்ள நிதிகளிலிருந்து தகைமையுடைய ஆட்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறக்கலாம்.

**4 அறிக்கையிடல் தேவைப்பாடு**

**4.1** சிறப்பு வைப்புக் கணக்குகள் மீது வழங்கப்பட்ட 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள் மற்றும் 2020ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையிடல் தேவைப்பாடுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

**4.2** சிறப்பு வைப்புக் கணக்குகள் மீதான தகவல்களை dfem@cbsl.lk என்ற மின்னஞ்சலூடாக பின்வருமாறு இத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

i இப்பணிப்புரைகளின் **பின்னிணைப்பு Iஇல்** தரப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக **வாராந்த அடிப்படையில்** தொடர்ந்து வருகின்ற வாரத்தின் 2ஆம் வேலை நாளின் வியாபார நேரம் முடிவடைவதற்கு முன்பாக, மற்றும்

ii இப்பணிப்புரைகளின் **பின்னிணைப்பு IIஇல்** தரப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக **மாதாந்த அடிப்படையில்** தொடர்ந்து வருகின்ற மாதத்தின் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாக

**4.3** மேற்குறித்த அறிக்கையிடும் தேவைப்படுத்தல்களுக்காக தமது தொடர்புடைய வங்கிகளின் கணக்கு ஏடுகளிலிருந்து இயைபுடைய தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் பொருட்டு வங்கியினுள் முறைமையொன்றை நடைமுறைப்படுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பணிப்பாளர்**
**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2020 நவெம்பர், 25**

10ஆம் இலக்க பணிப்புரைகளின் பின்னிணைப்பு I

## சிறப்பு வைப்புக் கணக்குகளின் வாராந்தக் கூற்று - தவணை வைப்புக்கள்

**வங்கியின் பெயர்:**
**அறிக்கையிடும் வாரம், மாதம் மற்றும் ஆண்டு:**

**அட்டவணை 1: வாரத்தில் திறக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகள்**

| கிளையின் பெயர் | கிளை குறியீடு | கணக்கு வைத்திருப்பவரின் பெயர்* | கணக்கு வைத்திருப்பவரின் வதிவிடம் ** | தே.அ.அ/ கடவுச்சீட்டு இல. | நாணயக் குறியீடு | கணக்கு இல. | திறந்த திகதி (தி - மா - ஆ) | வைப்புத் தொகை | வைப்புக்காலம் மாதங்களில் (பொருத்தமான நிரலில் அடையாளமிடுக) | | முதிர்வுத் திகதி (தி - மா - ஆ) | வங்கியினால் வழங்கப்படும் சாதாரண வட்டி வீதம் (இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் மேலதிக வட்டி நீங்கலாக) (ஆண்டுக்கு %) | பிரயோகிக்கப்படக்கூடிய மேலதிக வட்டி வீதம் (06 மாதங்களுக்கு ஆண்டுக்கு 1% அல்லது 12 மாதங்களுக்கு ஆண்டுக்கு 2%) | முதிர்வில் வங்கியால் செலுத்தப்பட வேண்டிய வட்டி (தொகை) | இலங்கை மத்திய வங்கியிடமிருந்து கோரப்பட வேண்டிய வட்டி (தொகை) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | 06 | 12 | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |

**அட்டவணை 1(அ): மேலே அட்டவணை 1இல் அறிக்கையிடப்பட்ட வாரத்தில் திறக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளுக்கான நிதி மூலம் - நாணய ரீதியான சுருக்கம்**

| நாணயக் குறியீடு*** | உள்முக வருகைகள் | மாற்றல்கள் | | வெளிநாட்டு நாணய வைப்புக்கள் |
|---|---|---|---|---|
| | | உ.மு.கணக்குகளிலிருந்து | க.வ.பிரிவுக் கணக்குகளிலிருந்து | |
| USD | | | | |
| EUR | | | | |
| LKR | | | | |

**குறிப்பு:** * அதே ஆள் பல வைப்புக்களைப் பேணுவாராயின், ஒவ்வொரு வைப்புக்குமென தனியான நிரையினைப் பயன்படுத்தவும்.
** கணக்கு வைத்திருப்பவரின் வதிவிடம் R- வதிபவர்
NR- வதியாதவர்
*** வேறு பெயர்குறித்துரைக்கப்பட்ட நாணயங்களுக்குத் தேவையான நிரைகளை நீங்கள் விரிவுபடுத்தலாம்.

மேற்குறித்தவற்றின் எம்எஸ் எக்ஸல் (MS Excel) பதிப்பு மற்றும் அதே பதிப்பின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி இரண்டினையும் சமர்ப்பிக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கணக்கு ஏடுகளிலிருந்து எடுக்கபட்ட/ உருவாக்கபட்ட மேற்குறித்த தகவல்கள் சரியானவை என நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்:

கையொப்பம்:…………………………………………
திகதி:………………………………………………...

இணங்குவித்தல் அலுவலரின் பெயர்:

கையொப்பம்:…………………………………
திகதி:………………………………………...

## முதிர்ச்சியடைந்த/ மேலும் நீடிக்கப்பட்ட/ சாதாரண வைப்புக்களாகத் தொடரப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று

**வங்கியின் பெயர்:**
**அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு:**

**அட்டவணை 1: வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரைகளின் பந்தி 9(ஈ)இன் கீழ் மாதக்காலத்தில் மேலும் நீடிக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகள்**

| கிளையின் பெயர் | கிளை குறியீடு | கணக்கு வைத்திருப்பவரின் பெயர்* | கணக்கு வைத்திருப்பவரின் வதிவிடம் ** | தே.அ.அ/ கடவுச்சீட்டு இல. | நாணயக் குறியீடு | கணக்கு இல. | மேலும் நீடிக்கப்பட்ட திகதி (தி - மா - ஆ) | வைப்புத் தொகை | முதிர்வுத் திகதி (தி - மா - ஆ) | வங்கியினால் வழங்கப்படும் சாதாரண வட்டி வீதம் (இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் மேலதிக வட்டி நீங்கலாக) (ஆண்டுக்கு %) | முதிர்வில் வங்கியால் செலுத்தப்பட வேண்டிய வட்டி (தொகை) | இலங்கை மத்திய வங்கியிடமிருந்து கோரப்பட வேண்டிய வட்டி (தொகை) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

**அட்டவணை 2: வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க பணிப்புரைகளின் பந்தி 3(அ)இன் கீழ் மாதக்காலத்தில் சாதாரண வைப்புக்களாகத் தொடரப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகள்**

| கிளையின் பெயர் | கிளை குறியீடு | கணக்கு வைத்திருப்பவரின் பெயர்* | கணக்கு வைத்திருப்பவரின் வதிவிடம் ** | தே.அ.அ/ கடவுச்சீட்டு இல. | நாணயக் குறியீடு | கணக்கு இல. | சாதாரண வைப்பாக தொடரப்பட்ட திகதி (தி - மா - ஆ) | வைப்புத் தொகை | முதிர்வுத் திகதி (தி - மா - ஆ) | வங்கியினால் வழங்கப்படும் வட்டி வீதம் | முதிர்வில் வங்கியால் செலுத்தப்பட வேண்டிய வட்டி (தொகை) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

**அட்டவணை 3: மாதக்காலத்தில் முதிர்ச்சியடைகின்ற மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரைகளின் பந்தி 9(ஈ)இன் கீழ் மேலும் நீடிக்கப்படாத அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க பணிப்புரைகளின் பந்தி 3(அ)இன் கீழ் சாதாரண வைப்புக்களாகத் தொடரப்படாத சிறப்பு வைப்புக் கணக்குகள்**

| கிளையின் பெயர் | கிளை குறியீடு | கணக்கு வைத்திருப்பவரின் பெயர்* | கணக்கு வைத்திருப்பவரின் வதிவிடம் ** | தே.அ.அ/ கடவுச்சீட்டு இல. | நாணயக் குறியீடு | கணக்கு இல. | திறந்த திகதி (தி - மா - ஆ) | வைப்புத் தொகை | முதிர்வுத் திகதி (தி - மா - ஆ) | வங்கியினால் வழங்கப்படும் வட்டி வீதம் | முதிர்வில் வங்கியால் செலுத்தப்பட வேண்டிய வட்டி (தொகை) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

**அட்டவணை 3(அ): முதிர்வின் பின்பு மேலே அட்டவணை 3இல் அறிக்கையிடப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளிலுள்ள நிதிகளின் பற்றுக்கள் - நாணய ரீதியான சுருக்கம்**

| நாணயக் குறியீடு*** | இலங்கையில் செய்யப்பட்ட எடுப்பனவுகள் | இலங்கைக்கு வெளியே அனுப்பப்பட்ட பணவனுப்பல்கள் | மாற்றல்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | உ.மு.கணக்குகளுக்கு | த.வெ.கணக்குகளுக்கு | க.வ.பிரிவுக் கணக்குகளுக்கு |
| USD | | | | | |
| EUR | | | | | |
| LKR | | | | | |

**குறிப்பு:** * அதே ஆள் பல வைப்புக்களைப் பேணுவாராயின், ஒவ்வொரு வைப்புக்குமென தனியான நிரையினைப் பயன்படுத்தவும்.
** கணக்கு வைத்திருப்பவரின் வதிவிடம் R- வதிபவர்
NR- வதியாதவர்
*** வேறு பெயர்குறித்துரைக்கப்பட்ட நாணயங்களுக்குத் தேவையான நிரைகளை நீங்கள் விரிவுபடுத்தலாம்.

மேற்குறித்தவற்றின் எம்எஸ் எக்ஸல் (MS Excel) பதிப்பு மற்றும் அதே பதிப்பின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி இரண்டினையும் சமர்ப்பிக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கணக்கு ஏடுகளிலிருந்து எடுக்கபட்ட/ உருவாக்கபட்ட மேற்குறித்த தகவல்கள் சரியானவை என நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்:

கையொப்பம்:…………………………………………
திகதி:……………………………………………...

இணங்குவித்தல் அலுவலரின் பெயர்:

கையொப்பம்:…………………………………
திகதி:………………………………………...